**ஏப்ரல் – 04**

# TNPSC துளிகள்

- திருச்சியில் சுமார் 290 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் நூலகத்திற்கு முன்னாள் தமிழக முதல்வர் K. காமராஜர் அவர்களின் பெயர் சூட்டப்பட உள்ளது.
    - சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய சில இடங்களில் ஏற்படுத்தப் பட்டு உள்ள பெரிய நூலகங்கள் முறையே முன்னாள் முதல்வர்களான CN அண்ணாதுரை, M. கருணாநிதி மற்றும் சமூகச் சீர்திருத்தவாதி பெரியார் EV ராமசாமி ஆகியோர் பெயரில் உள்ளது.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின்படி, நீலகிரி மற்றும் கொடைக் கானலில் சுற்றுலா வாகனங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் புதிய இணைய வழி அனுமதிச் சீட்டு முறையானது ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் செயல் பாட்டுக்கு வந்துள்ளது என்பதோடு இது ஜூன் 30 ஆம் தேதி வரையில் அமலில் இருக்கும்.
- ஆன்மீகத் தலைவரான தலாய் லாமாவிற்கு, அவரின் அமைதி மற்றும் தொலை நோக்குப் பார்வை கொண்ட நிர்வாகத்திற்காக மதிப்புமிக்க கோல்ட் மெர்குரி விருதானது தர்மசாலாவில் உள்ள அவரது இல்லத்தில் வழங்கப்பட்டது.
- ஹரியானாவின் ஹிசார் நகரில் உள்ள மகாராஜா அக்ரசென் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அக்ரசென் மகாராஜாவின் பிரமாண்ட சிலை சமீபத்தில் திறக்கப்பட்டது.
- டைகர் ட்ரையம்ப் 2025 (Tiger Triumph) எனப்படும் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் முப்படைகளின் நான்காவது பயிற்சியானது ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் விசாகப் பட்டினத்தில் நடைபெற்று வருகிறது.
- ரெனால்ட் குழுமம் ஆனது நிசான் நிறுவனம் தற்போது கொண்டுள்ள 51 சதவீதப் பங்குகளை வாங்கியதையடுத்து, ரெனால்ட் நிசான் ஆட்டோமோட்டிவ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (RNAIPL) நிறுவனத்தின் 100 சதவீதக் கட்டுப்பாட்டை ஏற்க உள்ளது.
- இந்திய விமானப்படை (IAF) ஆனது, அமெரிக்கா, பிரான்சு, ஸ்பெயின், இஸ்ரேல் மற்றும் பிற நாடுகளுடன் இணைந்து கிரீஸ் நாட்டில் நடைபெற்று வரும் INIOCHOS-25 எனப்படும் பன்னாட்டு விமானப் பயிற்சியில் பங்கேற்று வருகிறது.
- சர்வதேச அணுசக்தி முகமையின் (IAEA) தலைமை இயக்குநர் ரஃபேல் மரியானோ க்ரோசி, அணுசக்தி வழங்கீட்டுக் குழுமத்தில் (NSG) இணையச் செய்வதற்கான இந்தியாவின் முயற்சிக்கு வலுவான ஆதரவைத் தெரிவித்துள்ளார்.
- மேற்கு வங்காளத்தின் கொல்கத்தாவில் உள்ள இந்திய இராணுவத்தின் கிழக்குப் படைப்பிரிவானது, கிழக்குப் பயிற்சித் தளத்தில் பிரசாந்த் பிரஹார்-2025 எனப் படும் முப்படைகளின் ஒருங்கிணைந்த பல்துறைக் கூட்டுப் போர்ப் பயிற்சியினை மேற்கொண்டது.
- இணைய சங்கேதப் பணம் சார்ந்த சொத்துக்களை ஒரு நிதி சார் கூறாக சட்டப் பூர்வ அந்தஸ்தை வழங்குவதற்காக அதன் நிதியியல் செயற்கருவிகள் மற்றும் பரிமாற்றச் சட்டத்தினைத் திருத்தியமைக்க ஜப்பான் அரசு திட்டமிட்டுள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 31 ஆம் தேதியன்று, திருநர்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலக நாடுகள் ஆனது திருநர்களின் கட்புலனாகும் நிலை

தினத்தினை (TDOV) அனுசரிக்கிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## புதிய புவிசார் குறியீடுகள் 2025

- மிகவும் பாரம்பரிய கும்பகோண வெற்றிலை மற்றும் தோவாளை மாணிக்க மாலை ஆகியவை சமீபத்தில் புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளன.
- இந்த வெற்றிலையானது தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் மற்றும் அதை ஒட்டி உள்ள அய்யம்பேட்டை, சுவாமிமலை மற்றும் இராஜகிரி ஆகிய சில கிராமங்களில் மிகப் பரவலாக பயிரிடப்படுகிறது.
- மாணிக்க மாலையானது, கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளையில் தயாரிக்கப் படுகிறது.
- சிவப்பு மற்றும் வெள்ளை நிற அரளிப் பூக்கள் (ஒலியாண்டர்) நொச்சி இலைகளுடன் சேர்த்து மணிகள் போல மடிக்கப் பட்டு பின்னர் கட்டப்படுவதால் அவை மற்ற மலர் மாலைகளுக்கு மத்தியில் தனித்து நிற்கின்றன.
- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 02 ஆம் தேதியின் நிலவரப் படி, தமிழ்நாடு மாநிலமானது இது வரையில் 62 தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு பெற்றுள்ளது என்பதோடு அவற்றில் 11 தயாரிப்புகள் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவையாகும்.




## தனியார் சமபங்கு-துணிகர மூலதன முதலீடுகள் 2025

- தனியார் சமபங்கு-துணிகர மூலதன (PE-VC) நிறுவனங்கள் ஆனது, 2025 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நிறுவனங்களில் 14 ஒப்பந்தங்கள் மூலம் சுமார் 1,108 மில்லியன் டாலர்களை முதலீடு செய்துள்ளன.
- 2024 ஆம் ஆண்டின் இதே காலக்கட்டத்துடன் ஒப்பிடச் செய்யும் போது இது மிகப்பெரிய அதிகரிப்பு ஆகும்.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், முதலீடுகளின் அடிப்படையில் மிக அதிகபட்ச முன்னேற்றம் பதிவானது.
- தேசிய அளவில், PE-VC நிறுவனங்கள் 2025 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் இந்திய நிறுவனங்களில் 270 ஒப்பந்தங்களில் 7.9 பில்லியன் டாலருக்கும் அதிகமாக முதலீடுகளை மேற்கொண்டன.

❖ இந்த முதலீட்டுத் தொகையானது, 2024 ஆம் ஆண்டில் இதே காலக் கட்டத்தில் முதலீடு செய்யப் பட்ட சுமார் 7.3 பில்லியன் டாலர்களை விட (264 ஒப்பந்தங்களில்) சுமார் 8% அதிகரிப்பைக் குறிக்கிறது.

| Type of Investor | Investment Size | Stage of Business | Risk Appetite | Investment Source | Involvement Level |
|---|---|---|---|---|---|
| 💰 Angel Investors | Small to Medium ($10K-$500K) | Early-stage Startups | High | Personal Wealth | High (Mentorship & Guidance) |
| 🌍 Venture Capitalists (VCs) | Large ($500K to Millions) | Growth-stage Startups | High | Institutional Funds | High (Board Involvement) |
| 🎓 Private Equity Investors | Very Large ($10M+) | Mature Businesses | Medium | Institutional & Private Capital | Very High (Operational Changes) |
| 📄 Institutional Investors | Large-Scale ($Millions+) | Varies | Low to Medium | Pooled Funds | Low to Medium |
| 📈 Retail Investors | Small ($1K to $50K) | Public Markets | Varies | Personal Savings | Low |
| ⏳ Hedge Fund Investors | Large ($1M+) | Varies | Very High | Pooled Funds | Medium to High |
| 🛠 Crowdfunding Investors | Small ($10 to $1K) | Early-stage/Projects | High | Collective Contributions | Low |

## நான்கு வகையான இருவாட்சிகளின் வளங்காப்பு 2025




❖ மலை இருவாட்சி, மலபார் கருப்பு வெள்ளை இருவாட்சி, இந்திய சாம்பல் இருவாட்சி மற்றும் மலபார் சாம்பல் இருவாட்சி ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக ஒரு சிறப்பு மையத்தினை நிறுவ மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

❖ இந்தியாவில் உள்ள ஒன்பது இருவாட்சிப் பறவைகளில் நான்கிற்கு இந்த மாநிலம் ஒரு கடைசிப் புகலிடமாக உள்ளதை இந்த மாநிலம் ஒரு பெருமையாக கொண்டுள்ளது.

❖ வனத்துறையானது, வளங்காப்பிற்காக ஆனைமலைப் புலிகள் சரணாலயம் (மலபார் சாம்பல் இருவாட்சி மற்றும் மலை இருவாட்சி ஆகியவற்றிற்காக என்று), அத்திக்கடவு-பில்லூர்-பவானிசாகர் பள்ளத்தாக்குப் பகுதி (மலபார் கருப்பு வெள்ளை இருவாட்சி ஆகியவற்றிற்காக) மற்றும் சத்தியமங்கலம் போன்ற சில வறண்ட காடுகள் (இந்திய சாம்பல் இருவாட்சி ஆகிய ஒன்றிற்காக) ஆகிய முக்கியப் பகுதிகளை அடையாளம் கண்டுள்ளது.

❖ மலை இருவாட்சி மற்றும் மலபார் சாம்பல் இருவாட்சி ஆகியவை IUCN அமைப்பின்

செந்நிறப் பட்டியலில் 'எளிதில் பாதிக்கப்படக்கூடிய' இனங்களாகப் பட்டியலிடப் பட்டு உள்ளன.

- ❖ மலபார் கருப்பு வெள்ளை இருவாட்சி ஆனது, 'அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த' இனமாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- ❖ நாட்டில் மிகப் பரவலாக காணப்படும் இந்திய சாம்பல் இருவாட்சி, 'தீவாய்ப்பு கவலை குறைந்த இனம்' என்ற பிரிவில் உள்ளது.
- ❖ இருவாட்சிப் பறவைகள் ஆனது தாங்களாகவேப் பொந்துகளை உருவாக்குவதில்லை மாறாக ஏற்கனவே மரங்களில் உள்ள சில பொந்துகளில் தங்கும் இரண்டாம் நிலைப் பறவைகள் ஆகும் என்பதோடு மேலும் அதே பொந்துகளை பல ஆண்டுகளுக்கு என்று முட்டையிடப் பயன்படுத்தப்படுகின்றன.
- ❖ மேலும் இது அப்பறவைகள் முட்டையிட வேண்டிப் பயன்படுத்தப்படும் மரங்களான டிப்டீரோகார்பஸ் இன்டிக்கஸ், கிரிப்டோகார்யா அனமல்யனா மற்றும் மைரிஸ்டிகா மலபாரிகா ஆகியவற்றைப் பாதுகாக்கும் திட்டத்தினையும் உள்ளடக்கியதாகும்.
- ❖ பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் அல்லது International Union for Conservation of Nature என்ற அமைப்பின் ஒரு கூற்றுப்படி டிப்டீரோகார்பஸ் இன்டிக்கஸ் மற்றும் கிரிப்டோகார்யா அனமல்யனா ஆகிய இரண்டும் ஆபத்தில் (endangered) உள்ளது என்ற ஒரு நிலையில் மைரிஸ்டிகா மலபாரிகா என்பது பாதிக்கப்படக் கூடியது (vulnerable) என்ற ஒரு நிலையில் உள்ளது.

# தேசியச் செய்திகள்

## வங்கி சட்டங்கள் (திருத்தம்) மசோதா, 2024




- ❖ 2024 ஆம் ஆண்டு வங்கிச் சட்டங்கள் திருத்த மசோதா ஆனது, மாநிலங்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- ❖ இந்தப் புதிய வங்கிச் சட்டங்கள் ஆனது, ஒரு வங்கிக் கணக்கு வைத்திருப்பவர் நான்கு வாரிசுதாரர்கள் வரை நியமிக்க அனுமதிக்கின்றன, இதில் ஒரே நேரத்தில் பணம் மற்றும் நிலையான வைப்புத் தொகைக்கான வாரிசுதார நியமனங்களும் அடங்கும்.
- ❖ கூட்டுறவு வங்கிகளில் இயக்குநர்களின் (தலைவர் மற்றும் முழுநேர இயக்குநர் தவிர) பதவிக் காலத்தை எட்டு ஆண்டுகளில் இருந்து 10 ஆண்டுகளாக அதிகரிக்கவும் இந்த மசோதா முயல்கிறது.

- இனி ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கியின் இயக்குநர் ஒரு மாநிலக் கூட்டுறவு வங்கியின் குழுவில் பணியாற்ற முடியும்.

## இந்திய ரிசர்வ் வங்கியின் 90வது ஆண்டு நிறைவு




- மும்பையில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் இந்திய ரிசர்வ் வங்கியின் 90வது ஆண்டு நிறைவின் நினைவு நாணயம் வெளியிடப்பட்டது.
- இந்திய ரிசர்வ் வங்கி ஆனது, 1934 ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டு, தனியாருக்குச் சொந்தமான நிறுவனமாக 1935 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று அதன் செயல்பாடுகளைத் தொடங்கியது.
- இது 1949 ஆம் ஆண்டில் 1948 ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கி (அரசு உரிமத்திற்கு மாற்றம்) சட்டம் மூலம் தேசியமயமாக்கப்பட்டது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் முதல் ஆளுநர் சர் ஆஸ்போர்ன் ஸ்மித் ஆவார்.
- சர் C.D. தேஷ்முக் முதல் இந்திய ஆளுநர் ஆவார்.
- ஒரு ரூபாய் தாள்கள் மற்றும் நாணயங்களைத் தவிர மற்ற இந்தியப் பணத்தாள்களை வெளியிடுவதற்கும் மேலாண்மை செய்வதற்குமான பொறுப்பினை இந்திய ரிசர்வ் வங்கி கொண்டுள்ளது.


# சர்வதேசச் செய்திகள்

## நங்காய் கடல் பள்ளத்தில் மாபெரும் நிலநடுக்கம்

- ஒரு "மாபெரும் நிலநடுக்கம்" மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்படும் ஒரு சுனாமி என்பது ஜப்பானில் 298,000 பேர் வரையிலான உயிர் பலியையும், சுமார் 2 டிரில்லியன் டாலர்கள் வரையில் சேதத்தையும் ஏற்படுத்தக் கூடும்.
- நங்காய் பள்ளம் என்ற பகுதியில் அடுத்த 30 ஆண்டுகளுக்குள் 8–9 ரிக்டர் அளவிலான நில நடுக்கம் ஏற்படுவதற்கான நிகழ்தகவு 70-80% ஆகும்.
- நங்காய் பள்ளம் என்பது ஷிசுவோகாவிலிருந்து கியூஷூ வரை நீண்டு காணப்படும் 900 கிலோமீட்டர் நீளமுள்ள கடலுக்கு அடியில் உள்ள ஒரு பிளவு ஆகும்.
- இங்கே, பிலிப்பைன்ஸ் கடல்சார் கண்டத் தட்டு ஆனது "கீழமுங்குகிறது" அல்லது

ஜப்பான் அமைந்துள்ள கண்டத் தட்டின் கீழ் மெதுவாக கீழிறங்குகிறது.

- கடந்த 1,400 ஆண்டுகளில், ஒவ்வொரு 100 முதல் 200 ஆண்டுகளுக்கு ஒருமுறை நங்காய் பள்ளத்தில் மாபெரும் நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன என்ற ஒரு நிலையில் அவற்றுள் மிகச் சமீபத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் 1946 ஆம் ஆண்டில் ஏற்பட்டது.




# பொருளாதாரச் செய்திகள்

## திருத்தப்பட்ட FPI அறிவிப்பிற்கான விதிமுறைகள்





- இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் ஆனது, அந்நியத் தொகுப்பு முதலீட்டாளர்களின் (FPI) பன்மய முதலீட்டு உரிம அறிவிப்பிற்கான முதலீட்டு வரம்பை 25,000 கோடி ரூபாயிலிருந்து 50,000 கோடி ரூபாயாக உயர்த்த வாய்ப்புள்ளது.
- இந்த உரிம அறிக்கை வெளிப்படுத்தல் விதிமுறைகள் ஆனது, 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.
- 25,000 கோடி ரூபாய்க்கு மேல் பாதுகாவலர் மேலாண்மையின் கீழ் உள்ள

சொத்துக்களை (AUC) வைத்திருக்கும் அல்லது அவர்களின் AUC சொத்துகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை ஒரே நிறுவனக் குழுவில் குவிந்துள்ள FPI முதலீடுகள் குறித்த கூடுதல் உரிமை விவரங்களை வழங்க வேண்டும்.

# மாநிலச் செய்திகள்

## சர்ஹுல் திருவிழா 2025




- ஜார்க்கண்ட் மற்றும் சோட்டாநாக்பூர் ஆகிய பகுதிகளானது புத்தாண்டு மற்றும் வசந்த காலத்தின் தொடக்கத்தினை சர்ஹுல் திருவிழாவுடன் கொண்டாடியது.
- சர்ஹுல் என்பது "சால் மர வழிபாடு" என்று பொருள்படுகிறது.
- ஷோரியா ரோபஸ்டா எனப்படும் சால் மரம் ஆனது, டிப்டெரோகார்பேசி குடும்பத்தில் உள்ள ஒரு மர இனமாகும்.
- இந்த மரம் ஆனது இந்தியா, வங்காளதேசம், நேபாளம், திபெத் மற்றும் இமயமலைப் பகுதியைப் பூர்வீகமாகக் கொண்டது.
- சர்ஹுல் விழாவானது ஓரான், முண்டா, சந்தால், காடியா மற்றும் ஹோ போன்ற சிலப் பழங்குடியினரால் தனித்துவமான வெவ்வேறு பெயர்களுடன் கொண்டாடப்படுகிறது.


# இதரச் செய்திகள்

## உயிரியல் ஆயுத உடன்படிக்கையின் 50வது ஆண்டு நிறைவு

- பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களின் (WMD) அனைத்து வகையையும் தடை செய்யும் முதல் பலதரப்பு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் இதுவாகும்.
- இது 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கையொப்பத்திற்காக முன் வைக்கப்பட்டு, 1975 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.
- இது உயிரியல் ஆயுதங்களைப் பயன்படுத்துவதை மட்டுமே தடை செய்த 1925 ஆம்

ஆண்டு ஜெனீவா நெறிமுறையில் உள்ள குறையை பூர்த்தி செய்தது.

- இந்தியா மற்றும் இதில் கையெழுத்திட்ட இதர நான்கு நாடுகள் உட்பட (எகிப்து, ஹைதி, சோமாலியா மற்றும் சிரியா) 188 நாடுகள் இந்த உடன்படிக்கையின் கட்சி தாரர் நாடுகள் ஆகும்.




## நிர்மல் யாதவ் வழக்கு 2025




- சண்டிகரில் உள்ள சிறப்பு மத்தியப் புலனாய்வு நீதிமன்றமானது, 'நீதிபதியின் வீட்டில் பணம் கண்டறியப்பட்ட' (Cash at Judge's Door) ஒரு வழக்கில் முன்னாள் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்ற நீதிபதி நிர்மல் யாதவை விடுவித்துள்ளது.
- 2006 ஆம் ஆண்டில், இவர் சண்டிகரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநில உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்று 2011 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.
- 2008 ஆம் ஆண்டில், பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்ற நீதிபதி நிர்மல்ஜித் கௌரின் இல்லத்தில் 15 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

- நீதிபதி யாதவுக்கு அனுப்பப்பட வேண்டிய பணமானது, அவர்களின் ஒத்த பெயர்களில் குழப்பம் காரணமாக மற்றொரு நீதிபதியின் இல்லத்திற்கு தவறாக அனுப்பட்டதாகக் கூறப்பட்டது.

## ஹுருன் அமைப்பின் உலகளாவியப் பணக்காரர்கள் பட்டியல் 2025

**India at 3rd spot with 284 Billionaires**

| Rank | Country | Number of Billionaires | Change YoY |
|---|---|---|---|
| 1↑ | USA | 870 | 70 |
| 2↓ | China | 823 | 9 |
| 3- | India | 284 | 13 |
| 4- | UK | 150 | 4 |
| 5- | Germany | 141 | 1 |

- ஹுருன் அமைப்பின் 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவியப் பணக்காரர்கள் பட்டியலில், 284 பில்லியனர்களுடன் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- கடந்த 10 ஆண்டுகளில் முதல் முறையாக, 870 பில்லியனர்களுடன் அமெரிக்கா முதல் இடத்தில் உள்ளது.
- 823 பணக்காரர்களுடன் சீனா உலகிலேயே இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ஆசியாவின் பில்லியனர் வகை தலைநகராக விளங்கிய மும்பையை ஷாங்காய் முந்தி உள்ளது.
- மும்பையில் வசிக்கும் 90 பில்லியனர்களுடன் ஒப்பிடும் போது ஷாங்காய் நகரில் 92 பில்லியனர்கள் உள்ளனர்.
- பெங்களூரு மற்றும் மும்பையைச் சேர்ந்த 40 வயதுக்குட்பட்ட ஏழு பில்லியனர்கள் இந்தியாவில் உள்ளனர்.
- இந்தப் பட்டியலில் இடம் பெற்ற இரண்டு இந்தியப் பில்லியனர்கள் வெறும் 34 வயது உடையவர்கள் ஆவர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★